1973 நவம்பர் 20]

வ. உ. சிதம்பரனார் குடும்பத்திற்குத் தனி ஓய்வூதியம்

*** 200 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வ. உ. சிதம்பரனார் குடும்பத்திற்கு நிதி உதவி அளிப்பது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். மறைந்த திரு. வ. உ. சிதம்பரனாரின் மகள் திருமதி ஆனந்தவல்லி அவர்களுக்கும், மூத்த மகன் திரு. வ. உ. சி. ஆறுமுகம் அவர்களுக்கும் முறையே 20—10—1972, 1—10—1973-லிருந்து தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம், தனிச் சலுகையாக, மாதம் ரூ. 75 விதம் வழங்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் அவர்களுடைய இல்லத்தினை அரசே ஏற்றுக்கொண்டு நினைவுச் சின்னமாக உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே அது நினைவுச் சின்னமாகத்தான் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இந்தத் தியாகிகளுக்குக் கொடுக்கப்படும் மானியம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறதா ? அல்லது, வித்தியாசம் இருக்கிறதா ? வித்தியாசம் இருக்குமானால், கூடுதல் எவ்வளவு, குறைவு எவ்வளவு என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லாருக்கும் ஒரே மாதிரியாகத்தான் தரப்படுகிறது.

தமிழில் கல்லூரிப் பாட நூல்கள்

*** 201 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிப் பாடநூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற சிறப்பு நடவடிக்கைகள் யாவை ?

(இ) இதற்கென, 1973-74-ம் ஆண்டுக்கு மத்திய அரசு நிதியுதவி ஏதேனும் அளித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இதுவரை 483 கல்லூரிப் பாடநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் 417 நூல்கள் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் எடுத்து வருகிறது.

(இ) மைய அரசிடமிருந்து 1973-74-ம் ஆண்டிற்கான நிதி உதவி பெற தக்க சமயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்தி மொழி வளர்ச்சிக்காக—பாட நூல்கள் வெளியிடுவது போன்று பல வகைகளிலே—ஏராளமான அளவு பணம் ஒதுக்குகிறது. அதே வகையில் தமிழ்ப் பாட நூல்களை வெளியிட நிதி உதவி தருவதற்கு நம்முடைய அரசு மேலும் வலியுறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்து பொதுவாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அந்த அந்த மாநில மொழி வளர்ச்சிக்கென்று ஒரு கோடி ரூபாய் தருவது என்ற திட்டத்தின் அடிப்படையில்தான் இந்த நிதி வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்தி மொழி அகில இந்திய ஆட்சி மொழி என்ற முறையில் அதற்கு இருபது கோடி ரூபாய்க்குமேல் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படுகிற நிலைமைகள் யெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தி மொழிக்கு எவ்வளவு சலுகை தரப்படுகிறதோ அதே சலுகை எல்லா தேசிய மொழிகளுக்கும் தரப்பட வேண்டும் என்றுதான் கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலும் வேறு பல மாநாடுகளிலும் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education whether there is any proposal to publish College text-books for non-Tamil languages, namely, for minority languages also?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

1973 நவம்பர் 20]

திரு. எஸ். வடிவேல் : கல்லூரிப் பாட நூல்களெல்லாம் தமிழில் கொண்டுவரும் வேலை இன்னும் எவ்வளவு நாளில் பூர்த்தியாகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எவ்வளவு நாள் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. ஆனால், இப்பொழுது 483 கல்லூரிப் பாட நூல்கள், பி.ஏ., பி.எஸ்ஸி., புகுமுக வகுப்பு ஆகியவற்றுக்காக வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் 417 நூல்கள் வெளியிடுவதற்கான முயற்சிகள் பல்வேறு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆண்டுக்காண்டு அது விரிவுபடுத்தப்படும். பொருளாதாரம், அரசியல், வரலாறு ஆகிய சில பிரிவுகளுக்கு மேல் பட்டப் படிப்பைப் பொறுத்த வரையில் எம்.ஏ. வகுப்புக்குப் பாட நூல்கள் தமிழில் வெளியிடுவதற்கான முயற்சியினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது.

நூல்கள் வாங்க நிதியுதவி

*** 202 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுப் படிக்கும் மாணவர்களுக்கு நூல்கள் வாங்க வழங்கப்படும் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை. தமிழ் நூல்களை வாங்க இப்பொழுது தரப்படும் தொகையான ரூ. 50 போதுமானது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படி நூல்கள் வாங்குவதற்கு அளிக்கப்படும் தொகை எந்தத் தேதியிலே இருந்து அளிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழில் பாடம் எடுத்துப் படிக்கும் மாணவர் ஒவ்வொருவருக்கும் பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்பிற்கு—ஆண்டொன்றுக்கு ரூ. 180 வீதம் மூன்று ஆண்டுகளுக்குத் தரப்படுகிறது. புகுமுக வகுப்பில்